
செயல் வீரர்கள் கூட்டம்..


ரேஷன் கடை திறப்பு...

# ‘‘அனைவருடனும் ஒத்துழைப்ப

**த. வளவன்**

‘குமரி மாவட்ட அ.தி.மு.க. என்றாலே அது நான்தான்’ என்று நிரூபித்தவர் முன்னாள் அமைச்சரும், ஜெ. பேரவை முன்னாள் செயலருமான தளவாய் சுந்தம். ஆனால், கடந்த மாதம் இவரது ஜெ. பேரவை செயலர் பதவியை அ.தி.மு.க. தலைமை பறித்தது. இதனால் ‘தளவாயின் பரபரப்பு அரசியல் ஓய்ந்துவிடும்’ என்றே லோக்கல் அ.தி.மு.க.வினர் நினைத்தனர். ஆனால், தொட்ட குமரியை இன்னும் தளவாய் விடவில்லை. நாளுக்கு நாள் அவரது அதிரடி அரசியல் அ.தி.மு.க.வினரை மட்டுமின்றி குமரி தி.மு.க.வினரையும் திகைக்க வைத்துள்ளது.

குமரி மாவட்ட அ.தி.மு.க.வில் எந்த அளவுக்குப் பரபரப்பு அரசியல்வாதியோ அந்த அளவுக்குப் பிறரின் அதிருப்திக்கு ஆளானவர் தளவாய் சுந்தரம்! முன்னாள் அமைச்சரும், குமரி மாவட்ட அ.தி.மு.க. அவைத் தலைவருமான ராஜேந்திர பிரசாத்துக்கும் இவருக்கும் ஏழாம் பொருத்தம். ராஜேந்திர பிரசாத் என்றில்லை. அ.தி.மு.க.வின் துவக்க கால விசுவாசிகளான நகரச் செயலர் பால்ராஜ், ஜெ. பேரவை பார்த்தசாரதி என்று அனைவரையும் பகைத்துக்கொண்டவர் தளவாய். அ.தி.மு.க. தலைமையிடம் தனக்கிருந்த நெருக்கம் காரணமாக அசைக்க முடியாத சக்தியாகவே திகழ்ந்து வந்தார். இவரது அதிரடி பாலிடிக்ஸால் காங்கிரஸில் இருந்து அ.தி.மு.க.வுக்கு வந்த குமாரதாஸ், நகரச் செயலாளர் பால்ராஜ், பார்த்தசாரதி, சுயம்புலிங்கம் போன்றோர் அ.தி.மு.க. கூடாரத்தையே காலி செய்த போதும், தனக்கென ஒரு தனி அணி அமைத்தே செயல்பட்டு வந்தார் தளவாய்.

நாகர்கோயில், வடசேரி பகுதியில் அமைந்திருப்பது நகராட்சியின் பத்தாவது வார்டு. இங்கு கவுன்சிலராக இருப்பவர் அ.தி.மு.க.வைச் சேர்ந்த சகாயராஜ். அ.தி.மு.க.வுக்கு அதிக செல்வாக்கு உள்ள இந்த வார்டில் ரேஷன் கடை கிடையாது. ஒரு கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் 9வது வார்டு ரேஷன் கடைக்குச் சென்றே ரேஷன் பொருட்கள் வாங்க முடியும். இதனால் கஷ்டப்பட்ட மக்கள், வார்டு கவுன்சிலர் சகாயராஜிடம் முறையிட, அவரும் மாவட்ட நிர்வாகத்திடம் போராடிப் பார்த்திருக்கிறார். ஆனாலும் எதுவுமே நடக்காமல் போக, குமரி மாவட்ட அ.தி.மு.க. பொறுப்பாளராக இருக்கும் தளவாய் சுந்தரத்துக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

உடனே தளவாய் சுந்தரம், மாவட்ட ஜெ. பேரவை செயலர் நாஞ்சில் முருகேசனிடம் ‘என்ன செய்யலாம்?’ என்று யோசனை கேட்டிருக்கிறார். அவர், ‘எனக்கு பத்தாவது வார்டில் 1 செண்ட் நிலம் இருக்கிறது. அது சும்மாதான் கிடக்கிறது. அதில் ஒரு ரேஷன் கடை கட்டிக் கொடுக்கலாம்’ என்று கூறியுள்ளார். அதன்படி துரிதகதியில் செயல்பட்ட நாஞ்சில் முருகேசன், தனது சொந்தப் பணம் சுமார் இரண்டு லட்சத்தில் ஒரு ரேஷன் கடையையே கட்டிக் கொடுத்துவிட்டார். ‘அரசு செய்வதை குமரி மாவட்ட அ.தி.மு.க. செய்வதா?’ என்று யாரும் கேட்டுவிடக்கூடாது என்று நினைத்த தளவாய் சுந்தரம், இந்த ரேஷன் கடையை நாகர்கோயில் நகராட்சியிடம் ஒப்படைப்பதாக, அ.தி.மு.க. கவுன்சிலர்கள் மூலம் நகராட்சியில் தீர்மானம் கொண்டு வரச் செய்தார். ரேஷன் கடையையும் நகராட்சியிடமே ஒப்படைத்துவிட்டார். கடந்த 26ஆம் தேதி இந்த ரேஷன் கடையைத் திறந்து வைத்த தளவாய் சுந்தரம், “பொதுமக்களின் வசதிக்காக அரசு செய்யாததை அ.தி.மு.க. செய்திருக்கிறது” என்று பேசி, அ.தி.மு.க.வினரிடமும், பொதுமக்களிடமும் நல்ல பெயரைத் தட்டிச் சென்றிருக்கிறார்.

இதனால் அதிருப்தி அடைந்த தி.மு.க.வினர் லோக்கல் அமைச்சர் சுரேஷ் ராஜனிடம் முறையிட, அவரோ, “ரேஷன் கடையைத் திறப்பது என்பது அரசு செய்ய வேண்டிய வேலை. அ.தி.மு.க.வினர் திறந்து வைத்திருப்பது ஒரு கட்டிடம் மட்டும்தான். அதை ரேஷன் கடையாக்க அரசால் மட்டுமே முடியும்” என்று சொல்லி சமாதானப்படுத்த வேண்டிய சிக்கலான நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இது ஒருபுறமிருக்க, கடந்த மாதம் வரையில் தனது அதிருப்தியாளர்களாக இருந்து வந்த கவிஞர் சதாசிவம், காரவிளை செல்வன், ஞானசேகர் போன்றவர்களைச் சமாதானப்படுத்தும் முயற்சியில் இறங்கி அதில் வெற்றியும் பெற்றிருக்கிறார் தளவாய் சுந்தரம். கவிஞர் சதாசிவத்துக்கு